**செ.வெ.எண்.386/2017** **நாள் : 08.08.2017**

# பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா குறித்த கல்லூரி முதல்வர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் தகவல்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வருகிற 30.08.2017 அன்று பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா பிரமாண்டமாக நடத்தப்பட உள்ளது. அவ்விழா சிறப்பாக நடத்தப்பட காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து கல்லூரி மாணவ-மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள், மருத்துவ முகாம்கள், இரத்ததான முகாம்கள் நடத்திட திட்டமிடப்பட்டு, அதற்கான ஆலோசனைக் கூட்டம் வரும் 10.08.2017 அன்று காலை 10.00 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடத்தப்பட உள்ளது.

இக்கூட்டத்திற்கு காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளான கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் மருத்துவக் கல்லூரிகளைச் சார்ந்த முதல்வர்கள் தவறாமல் பங்கேற்று, தங்களது ஆலோசனைகளை வழங்கி, விழா சிறப்பாக நடைபெற துணை நிற்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.